DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 23/2024 Crime No. 36/2023 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1- சுமதி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 11.12.2024 |

**எதிரி ஆஜர் இல்லை.**

முதல் விசாரணை

நான் மாணிக்கம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக உள்ளேன். எதிரி கதிர்வேலை எனக்கு அடையாளம் தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். தேதி மற்றும் மாதம் நினைவில்லை கடந்த 2 வருடங்கள், 7 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் காலை சுமார் 08.00-08.30 மணியளவில், நான் எனது வீட்டிக்கு அருகிலுள்ள பொது குடிநீர் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தேன். அப்போது எதிரியின் தங்கை எனக்கு அருகில் அவரது குடத்தை சோப்பு போட்டு இரண்டு முறை கழுவிக் கொண்டிருந்தார். அந்த சோப்பு தண்ணீர் நான் பிடித்துக் கொண்டிருந்த தண்ணீரில் தெரித்தது. அதற்கு நான் அவரிடம் ஏன் இப்படி செய்கிறாய் ஆற்றுத் தண்ணீர் சிறிது நேரம்தான் வரும் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னை சனியனே என்று திட்டினார். நான் அம்மாவாசை நாளில் என்னை ஏன் இப்படி திட்டுகிறாய் என்று கேட்டுவிட்டு நான் எனது குடத்தை எடுத்துக் கொண்டு எனது வீட்டு கேட்டிற்கு அருகில் வந்து கொண்டிருந்தேன். மீனா வீட்டிலிருந்த அவரது அண்ணன் எதிரியிடம் ஏதோ சொல்ல வீட்டிலிருந்து வெளியே வந்த எதிரி என்னை கன்னத்தில் நான்கு ஐந்து அடி அடித்துவிட்டார். பின்னர் கத்தியை எடுத்துக் கொண்டு தகாத வார்த்தைகளால் பேசிக் கொண்டு வந்ததால் நான் அங்கிருந்து நேரடியாக அம்மாபேட்டை காவல் நிலையம் சென்றுவிட்டேன். அன்று என்னிடம் புகார் எதுவும் வாங்கவில்லை. நான் பவானி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு நான் உள்நோயாளியாக ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். பின்னர் மேல் சிக்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் அங்கு ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். முதலில் கேஸ் வேண்டாம் என்று காவல் நிலையத்தில் கூறிவிட்டோம். எதிரி மன்னிப்பு கேட்காததால் மீண்டும் புகார் அளித்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் கத்தியை வைத்துக் கொண்டுதான் எதிரி என்னை மிரட்டினார். கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைகாக ஒத்தி வைக்கப்படுகிறது.**